சாலைகளை எல்லாம்—நான் நேற்றைக்கேகூட சட்டமன்றத்திலே தெரிவித்து இருக்கிறேன். முதலிலே ஒரு வழி சாலைகளையெல்லாம் பழுது பார்க்கிற பணிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சி காலத்திலே மிகத் தீவிரமாக செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே முதற்கட்ட பணிகள் முடிவு அடைந்ததற்குப்பின்னாலே தான், இரண்டு வழி சாலைகளாக மாற்றுகிற பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்து இருக்கிறேன். இதற்கு ஏறக்குறைய 1 கோடி ரூபாய் மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது. அந்த அளவிலே நிதி ஆதாரங்கள் இந்த ஆண்டு இல்லாத காரணத்தினாலே முதலிலே ஒரு வழி சாலைகளை சீர்படுத்திவிட்டு அதற்கு பின்னாலே இரு வழிச் சாலைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: வினா எண் 71, திரு. தா. செழியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

71—

<u>திருவாளந்துறை வெள்ளாற்றில் பாலம்.</u>

*9733—<u>திரு. தா. செழியன்</u>:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடைப்பளிப்பாரா :

பெரம்பலூர் வட்டம், திருவாளந்துறை வெள்ளாற்றில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் கட்டும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

<u>திரு. தா. செழியன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த திருவாளந்துறை வெள்ளாற்று பாலம் கட்டினால் திருச்சி தென்னாற்காடு மாவட்டங்களில் 30 கிராம விவசாயிகள் பயன் அடைவார்கள். இரு மாவட்ட மக்களும் வியாபாரத்தை பெருக்குகின்ற அளவுக்கு அது வசதியாக இருக்கும். எனவே அடுத்த நிதியாண்டிலாவது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்தப் பாலம் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆற்று வழி நீர்ப் பாதை சுமார் 100 மீட்டருக்கு கட்டப்பட வேண்டும். இதன் மதிப்பீடு

ஏறத்தாழ 35 இலட்சம் ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. பொதுவாக ஒன்றை இந்த சட்ட மன்றத்திலே தெரிவித்துக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். தற்போது தமிழ் நாட்டில் அனைத்து பாலங்களையும் கட்ட வேண்டும் என்று சட்ட மன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முடிந்த அளவுக்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்கித்தந்து இன்றைக்கு போர்க் கால அடிப்படையில் பாலங்களும் சாலைகளும் கட்டும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டுடிருக்கின்றன என்பதை பல்வேறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே 5 ஆண்டுக்காலத்திலே செய்ய வேண்டிய பணிகளை ஒருஆண்டுக்காலத்திலேயே எடுத்துக் கொள்வது என்பது நடைமுறைக்கு முடியாத விஷயம். வருகிற ஆண்டிலேயிருந்து ஒவ்வொரு ஆண்டும் இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்து அந்தந்தப் பகுதியினுடைய முக்கியத்துவம் கருதி அந்தச்சாலைகள், மற்றும் பாலங்கள் எடுத்துக் கொள்ளப் படும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 72, திரு. எ.தா. பொன்னுவேலு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

72—

மருதையாற்றின் குறுக்கே பாலம்.

*9781—திரு. எ.தா. பொன்னுவேலு :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வரகூர் தொகுதி ஆலத்தூர் ஒன்றியம் சாத்தனூர் இலுப்பைகுடி சாலையில் உள்ள மருதையாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.